அற்புதமான வழிநடத்துதலை நீங்கள் பெறுவீர்களானால், அது நல்லதுதான். ஆனால் ஒரு தரிசனத்தைக் காண்பதாகவோ அல்லது கேட்கக்கூடிய குரலைக் கேட்பதாகவோ ''விசுவாசிக்க'' முயலாதிருங்கள். தேவன் தமது ராஜரீகமான சித்தப்படி சில வேலைகளில் இப்படி நம்மை வழிநடத்தினாலும், இப்படி நம்மை வழிநடத்துவதாக அவர் வாக்குத்தத்தம் அளிக்கவில்லை. ஆனால் உள்ளான சாட்சியின் மூலமாக அவர் எப்போதுமே நம்மை வழிநடத்துவார் என்று நம்மால் விசுவாசிக்க முடியும்.

இறுதியாக, தேவன் உங்களிடம் சொல்லுவதோடுகூட எதையும் கூட்டிச் சேர்க்காதிருங்கள். வருங்காலத்தில் உங்களுக்காகத் தாம் ஆயத்தம்பண்ணியிருக்கும் ஒரு ஊழியத்தைத் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தலாம். ஆனால் ஒரு சில ஆண்டுகள் கழித்தே அது நிறைவேறும்படியாக இருக்கும் வேளையில் ஒருசில வாரங்களிலேயே அது நிறைவேறும் என்று நீங்கள் யூகித்துக்கொள்ளலாம். எனது அனுபவத்திலிருந்து நான் இதை அறிவேன். எந்த யூகத்தையும் செய்யாதிருங்கள். பவுல் தனது வருங்காலத்தைக் குறித்த சில குறிப்புகளை அறிந்திருந்தாலும், முழுவதுமாக அதைக் குறித்து அறிந்திருக்கவில்லை. ஏனென்றால் தேவன் எல்லாவற்றையும் அவருக்கு வெளிப்படுத்தவில்லை. நாம் எப்போதுமே தொடர்ந்து விசுவாசத்தில் நடக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.



# 23

# சாக்கிரமெந்துகள்

இயேசுவானவர் சபைக்கு இரண்டு சாக்கிரமெந்துகளை மட்டுமே கொடுத்திருக்கிறார்: ஜலத்தினாலே ஞானஸ்நானம் (பார்க்க, மத். 28:19) மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம் (பார்க்க, 1 கொரி. 11:23–26). முதலாவது ஜலத்தினாலே ஞானஸ்நானத்தைப் பற்றிப் பார்ப்போம்.

புதிய உடன்படிக்கையின் கீழாக ஒவ்வொரு விசுவாசியும் மூன்று ஞானஸ்நானங்களை அனுபவிக்க வேண்டும். அவை கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஞானஸ்நானம் பெறுதல், ஜலத்தினாலே ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்.

ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது, அவர் தானாகவே கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார். அதாவது, அவர் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு உறுப்பினராக ஆகிறார்:

> எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு... (1 கொரி. 12:13; மேலும் பார்க்க, ரோமர் 6:3; எபே. 1:22–23; கொலோ. 1:18, 24).

ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவது இரட்சிப்பைத் தொடர்ந்து வருவதாகும். இந்த ஞானஸ்நானத்தை ஒவ்வொரு விசுவாசியும் பெற முடியும், பெற வேண்டும்.

இறுதியாக, ஒவ்வொரு விசுவாசியும் கூடுமான வரையில் விரைவாக, தான் மனந்திரும்பி, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கும்போது, ஜலத்தினாலே ஞானஸ்நானத்தைப் பெற வேண்டும். ஞானஸ்நானமே புதிய விசுவாசியின் முதன்முதலாகக் கீழ்ப்படியும் செயலாக இருக்க வேண்டும்.

> பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ள வனாகி *ஞானஸ்நானம் பெற்றவன்* இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான் [மாற்கு 16:15–16 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

துவக்க காலச் சபை ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்ற இயேசுவானவரின் கட்டளையை முக்கியமாக எடுத்துக்கொண்டது. கிட்டத்தட்ட எந்தவித விதிவிலக்கும் இல்லாமல் புதிதாக மனமாற்றம் பெற்றவர்கள் தாங்கள் மனமாற்றம் பெற்றவுடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் [பார்க்க, அப். 2:37–41; 8:12–16,36–39; 9:17–19; 10:44–48; 16:31–33; 18:5–8; 19:1–5].

## ஞானஸ்நானத்தைக் குறித்த வேதாகமத்துக்குப் புறம்பான சில கருத்துக்கள்

சிலர் புதிதாக மனமாற்றம் பெற்றவர்களின்மீது கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இது சரியானதா? புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் கொடுத்து என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் *பேப்டிசோ* என்பதாகும். இதற்கு அர்த்தம் ‘‘மூழ்க வைப்பது’’ என்பதாகும். எனவே, தண்ணீரினால் ஒருவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது அவர்மீது கொஞ்சம் தண்ணீரைத் தெளிப்பது போதுமானது அல்ல, அவரை நீரில் மூழ்க வைக்க வேண்டும்.

சிலர் சிசுக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். ஆனால் வேதாகமத்தில் சிசு ஞானஸ்நானத்தைக் குறித்த எந்த எடுத்துக்காட்டும் காணப்படவில்லை. இப்படிப்பட்ட செயல்பாடுகள் ‘‘ஞானஸ்நானத்தினால் மறுபடியும் பிறத்தல்’’ என்ற பொய்யான கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஒருவர் ஞானஸ்நானம் பெற்றவுடனே மறுபடியும் பிறக்கிறார் என்ற தவறான கருத்தே இதற்குக் காரணமாகும். மக்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக அவர்கள் இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. சிசுக்களோ அல்லது சிறுபிள்ளைகளோ அல்ல, கொஞ்சம் வளர்ந்த சிறுவர்களே மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற முடியும்.

ஒருவர் இயேசுவை விசுவாசித்தாலும், அவர் ஜலத்தினாலே ஞானஸ்நானம் பெறும் வரையில் அவர் இரட்சிக்கப்படுவதில்லை என்று சிலப் போதிக்கிறார்கள். அப்போஸ்தலர் 10:44–48 மற்றும் 11:17 வசனங்களில் ஜலத்தினாலே ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப்





பெற்றார்கள் என்று நாம் வாசிக்கிறோம். ஒருவர் முதலில் இரட்சிக்கப் படாவிட்டால், அவர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவது இயலாத காரியமாகும் [பார்க்க, யோவான் 14:17].

இந்தக் குறிப்பிட்ட சூத்திரத்தின்படி ஒருவர் ஞானஸ்நானம் பெறும் வரையில் அவர் மெய்யாகவே இரட்சிக்கப்படவில்லை என்று சிலர் போதிக்கிறார்கள். சரியான ஞானஸ்நானத்துக்கு எந்தெந்த சடங்குகளைப் பின்பற்ற வேண்டும் என்று வேதாகமம் போதிக்க வில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு விசுவாசிக்கு ‘‘இயேசுவின் நாமத்தில்’’ ஞானஸ்நானம் கொடுக்காமல் [அப். 8:16], ‘‘பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே’’ ஞானஸ்நானம் கொடுத்தால் [மத். 28:19] அவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். பரிசேயரிடம் இருந்த அதே ஆவியையே இந்த மக்கள் பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் கொசுவை வடிகட்டிவிட்டு, ஒட்டகங்களை விழுங்குகிறவர்களாக இருந்தார்கள். உலகம் நற்செய்தியைக் கேட்பதற்காகக் காத்திருக்கும் வேளையில், கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கும்போது சொல்லப்பட வேண்டிய சரியான வார்த்தைகளைக் குறித்து விவாதித்துக் கொண்டிருப்பது எவ்வளவு சோகமான காரியம்!

## ஞானஸ்நானம் குறித்த வேதாகமரீதியான அடையாளம்

ஜலத்தினாலே ஞானஸ்நானம் என்பது ஏற்கெனவே விசுவாசியின் வாழ்க்கையில் நடந்த பல காரியங்களுக்கு அடையாளமாக இருக்கிறது. முக்கியமாக, நமது பாவங்கள் கழுவப்பட்டிருக்கின்றன, நாம் தேவனுக்கு முன்பாகச் சுத்தமாக நிற்கிறோம் என்பதை அது குறிக்கிறது. சவுல் [பவுல்] மனமாற்றம் பெற்றுச் சில நாட்களுக்குள்ளாக அனனியா அவரிடம் அனுப்பப்பட்டபோது அனனியா சொன்ன வார்த்தைகள்:

> இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ் நானம் பெற்று, *உன் பாவங்கள் போகக் கழுவப்படு* என்றான் [அப். 22:16 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இரண்டாவதாக, ஜலத்தினாலே ஞானஸ்நானம் நாம் கிறிஸ்துவோடுகூட அவருடைய மரணத்திலும், அடக்கம்பண்ணப் படுதலிலும், உயிர்த்தெழுதலிலும் ஒன்றுபடுவதற்கு அடையாளமாக இருக்கிறது. நாம் மறுபடியும் பிறந்து கிறிஸ்துவின் சரீரத்துக்குள் வைக்கப்படும்போது, அந்த நேரத்திலிருந்து நாம் ‘‘கிறிஸ்துவுக்குள்’’ இருப்பதாகத் தேவனால் கருதப்படுகிறோம். இயேசுவானவர் நமது பதிலியாக இருந்தபடியால், அவர் செய்தது எல்லாவற்றையும் தேவன் நமது கணக்கில் வைக்கிறார். எனவே ‘‘கிறிஸ்துவுக்குள்’’ நாம் மரித்து,

அடக்கம்பண்ணப்பட்டு, ஒரு புதிய நபராக வாழும்படியாக மறுபடியும் உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறோம்.

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் [ரோமர் 6:3–4].

> ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் [கொலோ. 2:12].

ஒவ்வொரு புதிய விசுவாசிக்கும் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்போது இந்தச் சத்தியங்களை அவருக்குப் போதிக்க வேண்டும். அவர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தபிறகு, கூடிய விரைவில் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும்.

### கர்த்தருடைய இராப்போஜனம்

பழைய ஏற்பாட்டுப் பஸ்கா ஆசரிப்பில் கர்த்தருடைய இராப்போஜனம் தனது துவக்கத்தைக் கொண்டிருக்கிறது. தேவன் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த அந்த இரவிலே ஒவ்வொரு வீட்டாரும் ஒரு வயதான ஆட்டுக்குட்டியை பலியிட்டு அதன் இரத்தத்தைக் கதவு நிலைகளிலும் நிலையின் மேல் சட்டத்திலும் தெளிக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார். ''சங்கார தூதன்'' இரவில் செல்லும்போது, அவன் இஸ்ரவேலரின் வீடுகளில் இரத்தம் தெளிக்கப்பட்டிருப்பதைக் காணும்போது, அவைகளைக் கடந்துசென்று, எகிப்தியரின் வீடுகளிலுள்ள தலையீற்றுகளை மட்டும் சங்காரம்பண்ணுவான்.

மேலும் இஸ்ரவேலர் அன்றிரவு பஸ்கா ஆட்டுக்குட்டியைப் புசித்து அதை ஒரு பண்டிகையாகவும் ஆசரிக்கவேண்டும். ஏழு நாட்களுக்குப் புளிப்பில்லாத அப்பத்தைப் புசிக்க வேண்டும். இது இஸ்ரவேலருக்கு நிரந்தரமான நியமமாகக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஒரே காலத்தில் இதை ஆசரிக்க வேண்டும் [பார்க்க, யாத். 12:1–28]. இந்த பஸ்கா ஆட்டுக்குட்டி 1 கொரிந்தியர் 5:7 வசனத்தில் நமது ''பஸ்கா'' என்று அழைக்கப்படும் கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.





இயேசுவானவர் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்திய போது, அவரும் அவருடைய சீஷர்களும் பஸ்கா பண்டிகையை ஆசரித்துக்கொண்டிருந்தார்கள். பஸ்கா பண்டிகையின் வேளையில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். இப்படியாக ''உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக'' அவர் தமது அழைப்பை நிறைவேற்றினார் [யோவான் 1:29].

நாம் புசிக்கும் அப்பமும், நாம் அருந்தும் திராட்சரசமும், நமக்காக நொறுக்கப்பட்ட இயேசுவின் சரீரத்துக்கும், நமது பாவங்களுக்காகச் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்துக்கும் அடையாளமாக இருக்கின்றன:

> அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி, அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழ ரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் [மத். 26:26–29].

பவுல் அப்போஸ்தலன் இதை இப்படிச் சொல்லியிருக்கிறார்:

> நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்

> பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் [1 கொரி. 11:23–26].

### எப்போது மற்றும் எங்கே

எத்தனை முறை கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுக்க வேண்டும் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆனால் துவக்ககால வீட்டுச்சபைகளில் அது ஒரு ஒழுங்கான முழு உணவாக ஆசரிக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது [பார்க்க, 1 கொரி. 11:20–34]. கர்த்தருடைய இராப்போஜனம் இயேசுவானவரால் நிறுவப் பட்டபோது, அது பஸ்கா உணவின் ஒரு பகுதியாக இருந்தது. துவக்க காலச் சபையில் அது ஒரு முழு உணவாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றும் இப்படித்தான் இது செயல்படுத்தப்பட வேண்டும். என்றாலும் பெரும்பாலான சபைகள் ''மானிட பாரம்பரியங்களையே'' பின்பற்று கின்றன.

நாம் பயபக்தியோடு கர்த்தருடைய இராப்போஜனத்தை அணுக வேண்டும். பயபக்தியில்லாமல் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுப்பது தீவிரமான குற்றம் என்று பவுல் அப்போஸ்தலன் போதித்திருக்கிறார்.

> இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ள வனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினா லெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிற வன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர் களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் [1 கொரி. 11:27–32].

கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு முன்பாக நம்மை நாமே நிதானித்து அறிய வேண்டும் என்று சொல்லப்





பட்டிருக்கிறது. நாம் ஏதேனும் பாவத்தைக் கண்டுபிடித்தால், மனந்திரும்பி, அதை அறிக்கையிட வேண்டும். இல்லாவிட்டால், ''கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ள வர்களாயிருப்போம்.''

பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கும்படியாக இயேசுவானவர் சிலுவையில் மரித்துத் தமது இரத்தத்தைச் சிந்தியபடியால், அறியப்பட்டு ஆனால் அறிக்கையிடப்படாத எந்தவொரு பாவத்தோடும்கூட நாம் அவருடைய இரத்தத்தையும் சரீரத்தையும் குறிக்கும் அப்பத்திலும் திராட்சரசத்திலும் பங்கெடுக்க விரும்புவதில்லை. அப்படி நாம் அபாத்திரராக அப்பத்திலும் திராட்சரசத்திலும் பங்கெடுப்போமானால், கொரிந்திய கிறிஸ்தவர்களைப்போல நோய்வாய்ப்படுவோம், அகால மரணத்தையும் சந்திக்க வேண்டியிருக்கும். நம்மை ''நிதானித்து அறிவதின்மூலம்'', அதாவது நமது பாவங்களை ஒப்புக்கொண்டு மனந்திரும்புவதே தேவனுடைய சிட்சையைத் தவிர்ப்பதற்கு வழியாகும்.

அன்பில் குறைவுபட்டதே கொரிந்திய கிறிஸ்தவர்களின் அடிப்படைப் பாவமாக இருந்தது. அவர்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். கர்த்தருடைய இராப்போஜனத் தின் வேளையிலும்கூட இந்தக் குறைபாடு வெளிப்பட்டது. மற்றவர்கள் பசியாக இருக்கும்போது, சிலர் உணவருந்தினார்கள். சிலர் குடித்து வெறித்திருந்தார்கள் [பார்க்க, 1 கொரி. 11:20–22].

நாம் புசிக்கும் அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கிறது, இப்போது சபையே கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறது. ஒரே அப்பத்தில் நாம் பங்கெடுக்கிறோம், இது ஒரே சரீரமாக நமது ஐக்கியத்தைக் குறிக்கிறது [பார்க்க, 1 கொரி. 10:17]. சரீரத்தின் மற்ற உறுப்பினர் களோடு சண்டைபோட்டுக்கொண்டு, கிறிஸ்துவின் ஒரே சரீரத்தைக் குறிக்கும் ஒன்றில் பங்கெடுப்பது எவ்வளவு பெரிய குற்றம்! நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு முன்பாக, கிறிஸ்துவுக்குள் நமது சகோதர சகோதரிகளோடு சரியான உறவில் இருக்கிறோமா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவது அவசியமாகும்.